பக்கங்கள் 25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 24 வியாழக்கிழமை 11.12.2025 | அதிர்வு 133

## மண்சரிவு அபாய எச்சரிக்கை எட்டு மாவட்டங்களுக்கு நீடிப்பு

இலங்கையில் 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பதுளை, கம்பஹா, கண்டி, மாத்தளை, நுவரெலியா,

04 ▶

# பேரிடரை வைத்து அரசியல் செய்யாதீர்!

## இப்படி எதிரணிகளிடம் சந்திரிகா வலியுறுத்து இலங்கை மீண்டெழ உதவுமாறும் கோரிக்கை



“இயற்கைப் பேரனர்த்தத்தை வைத்து அரசியல் செய்வதில் சில எதிர்க்கட்சிகள் மும்முரமாக உள்ளன. இப்படியான நடவடிக்கையைக் கைவிடுமாறு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

04 ▶

# பேரனர்த்த நிவாரணப் பணிகளில் எவ்வித அரசியல் அழுத்தமும் இல்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ திட்டவட்டம்



பேரனர்த்த நிவாரணப் பணிகளில் அரச அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

“அரச அதிகாரிகளுக்கு அரச தரப்பில் இருந்து எவ்வித இடையூறும் விளைவிக்கப்படுவதில்லை. அரச ஊழியர்களுக்குச் சுதந்திரமும், அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. அவர்களும் சிறப்பாக செயல்படுகின்றனர்.” – என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

“தேசிய மக்கள் சக்தி அரசுக்கு சர்வதேச தொடர்பு இல்லை என விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால் சிறப்பான முறையில் உறவு பேணப்பட்டு வருகின்றது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி முறையாகப் பயன்படுத்தப்படாததால் சர்வதேசம் நம்பிக்கை இழந்து இருந்தது.

ஆனால் எமது நிர்வாகப் பொறிமுறை மீது சர்வதேசத்துக்கு முழு நம்பிக்கை உள்ளது.” – என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



அண்மைக்காலப் பேரிடரால் வீடுகள் பாதிப்புற்றோருக்கு வீடுகளை மறுசீரமைத்து மீளக் குடியேறுவதற்காக வழங்கப்படும் தலா 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெறும் குடும்பங்களின் பட்டியல் தொடர்பான விடயத்தில் வடக்கில் குளறுபடி ஏற்பட்டிருப்பதாக தொடர்ந்து கூறப்பட்டு வருகின்றது.

ஏன் இந்தக் குழப்பம் என்று தேடிப்பார்த்தால் இரண்டு விடயங்கள் தெளிவாகின.

ஒன்று – நவம்பர் 28 ஆம் திகதி அடை மழை பொழிந்த போது நாட்டின் பல இடங்களிலும் தொலைபேசிச் சேவைகள் செயலிழந்து போயின. பெரும் பாதிப்பு குடாநாட்டில்தான். யாழ்ப்பாணத்தில் உள்ள கடல் கடந்த தீவுகளுக்கான

02 ▶

### அரசு பாதுகாப்பான காணி தர மறுத்தால்

# வடக்கு - கிழக்கில் குடியேற மலையக மக்கள் விருப்பம்

## மனோ எம்.பி. அறிவிப்பு



“அரசு பாதுகாப்பான காணி தர மறுத்தால் என்ன செய்வது? மாற்று யோசனையாக, “வடக்கு – கிழக்கில் குடியேறி வாழ விருப்பமா?” என நான் சந்தித்த மலையுச்சியில் வாழும் மக்களைக் கேட்டேன். எனக்கே ஆச்சரியம், அவர்கள் உடனே உடன்பட்டுக் கோஷம் போட்டார்கள்!”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் தனது முகநூல் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

“மலையகத் தமிழ்த் தேசியத்துக்குத் தாயகம் மலையக பூமிதான்.

ஆனால், இதை நாம்தான் சொல்லி திரிகின்றோம். ஆனால், சிங்கள தேசம் அதை ஏற்கவில்லை.

நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, களுத்துறை, அவிசாவளை, குருநாகல் ஆகிய பிரதேச தோட்டங்களில் இருந்து, உழைச்சு, மண்ணுக்குள்ள போங்க. ஆனால், காணி எல்லாம் தர மாட்டோம்.

நுவரெலியா தவிர, ஏனைய கீழ் நாட்டு பெருந்தோட்ட காணிகளை, அயல் சிங்கள கிராமத்தவருக்குப் பிரிச்சுக் கொடுப்போம். ஆனால், உங்களுக்குத் தர மாட்டோம்!

இவைதானே உங்கள் (சிங்கள தேசம்) நிலைப்பாடு?

இதுதான் மலையகக் காணி உரிமை பிரச்சினை..!

இதைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள், தற்குறிகள் அல்லது வறட்டுவாதிகள் ஆவர்.

மாண்புமிகு மலையகத் தமிழர், மலையக மண்ணில் வாழணும்தான். அதையே நானும் விரும்புகின்றேன்.

ஆனால், அரசு பாதுகாப்பான காணி தர மறுத்தால் என்ன செய்வது?

ஆகவேதான், மாற்று யோசனையாக, “வடக்கு – கிழக்கில் குடியேறி வாழ விருப்பமா?” என நான் சந்தித்த மலையுச்சியில் வாழும் மக்களைக் கேட்டேன். எனக்கே ஆச்சரியம், அவர்கள் உடனே உடன்பட்டுக் கோஷம் போட்டார்கள்!

புலம்பெயர்வால், வடக்கு – கிழக்கில் இன்று காலியாகி, காடாகி வரும் காணிகளை, உரிமையாளர், மனமுவந்து தந்தால் இது சாத்தியப்படலாம். அவ்வளவுதான்!

என்னில் குற்றம் காண்பவர்கள், தோழரின் பக்கத்தில், இருக்கும் மாண்புமிகு மலையக நண்பர்கள், தங்கள் தோழரிடம் சொல்லி, பாதுகாப்பான காணிகளை மலையக மக்களுக்கு வாங்கித் தாருங்கள்!

“இடம், கொஹேத தியன்னே, மனோ?” (காணி, எங்கே இருக்கின்றது, மனோ?) என தோழர், என்னிடமே திருப்பிக் கேட்டார். ஆகவே, அவருக்கு இந்தக் காணி விடயத்தில் புரிதல் இல்லை.

ஆகவே, உண்மையான என்.பி.பி. நண்பர்கள் (தற்குறிகள் இல்லை!) அவருக்கு விளக்கிக் கூறனும்.

வடக்கு – கிழக்கில், மலையகத் தமிழர் குடியேறுவதை, சிங்கள தேசம், அரசியல் நோக்கில் விரும்பாட்டி, நமக்குப் பாதுகாப்பான காணியை இங்கே தரட்டுமே! நானும், அதைத்தானே கேட்கின்றேன்.

நீங்கள் காணியும் தர மாட்டீங்க! போகவும் விட மாட்டீங்க! இன்னொரு 200 வருடங்கள், இப்படி மண்சரிவு மலைகளில் இருந்து, உழைத்து, ஓடாகி, மண்ணுக்கு உள்ளே மடியனும் என்பதா, உங்கள் வறட்டுவாத தீர்வு? தற்குறி தீர்வு?”– என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அனைத்துத் தொலைபேசிச் சேவைகளுமே செயலிழந்தன. போக்குவரத்தும் தடைப்பட்டது.

இந்தச் சமயத்தில் கடல் கடந்த தீவுகளில் அதிகாரிகள் தங்கி நின்று பணியாற்றிய போதும், பாதிப்பு விவரங்களை அவர்களால் யாழ் செயலகத்திற்குச் சீராக அனுப்ப முடியவில்லை. ஒரு புறம் தொலைத் தொடர்புத் தடங்கல். மறுபுறம் போக்குவரத்துத் தடை. ஆயினும் கொழும்புக்கு பாதிப்பு விவரங்கள் பற்றிய தரவுகளைக் காலதாமதம் இன்றி பதிவேற்றம் செய்ய வேண்டிய நிலைமை இருந்தது. கட்டாயம் நிலவியது. அதனால் ஏற்கனவே பதிவில் உள்ள குடும்பப் பட்டியல்கள் அப்படியே பிரதி செய்யப்பட்டு பாதிப்புற்றோர் பட்டியலாகச் சென்று விட்டன என்று சில தரப்புக்கள் கூறுகின்றன. உண்மையாக இருக்கலாம்.

அடுத்தது – பிற இடங்களில் கிராம சேவையாளர்கள் நேரடியாகச் சென்று, பார்த்து, பட்டியல் தயாரித்து வழங்கினார்களாயினும், அந்தப் பட்டியல் இன்னுமொரு முறையிலும் மேலும் சேர்த்து நிரப்பப்பட்டது. அதாவது ஊர்த் தோழர்கள் ஆளுக்கு பத்துப் பன்னிரண்டு பேர் விவரங்களை வழங்க, அவையும் பட்டியலில் இணைக்கப்பட்டு விட்டன. ஆனால், இப்போது தனித்தனியாக படிவம் நிரப்பி அந்த விவரங்களை சரியானவை என உறுதி செய்யும் பொறுப்பு கிராம சேவையாளர்கள் தலையில் விழுந்த போதுதான், தோழர்கள் நிரப்பிய பட்டியலுக்கு யார் பொறுப்பு கூறுவது என்ற பிரச்சினை எழுந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதுவும் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர்கள் தலையிலேயே விழுந்து உள்ளது என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை.

எல்லா விடயங்களும் நடந்து முடிந்து, கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட பின்னரும், இந்த விவகாரம் மீண்டும் பிய்த்து உதறப்பட மாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. பாவம் கிராம சேவையாளர்கள்....!

* * *

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடரிலும் சாட்சியம் அளிக்க அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவதற்கு என்ன அச்சுறுத்தல் இருக்கிறது என்பதனைத் தெரிவிக்கும் நியாமான காரணங்களுடன் சத்திய கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு அவருக்கு யாழ் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டிருக்கின்றது.

தாம் ஜனாதிபதியாக இருந்த சுமார் இரண்டரை வருட காலமும் யாழ்ப்பாணப் பக்கமே தலை வைத்துப் படுக்காதவர் கோட்டாபய ராஜபக்ஷ.

2015 க்கு முன்னர் அவ்வப்போது சில சமயங்களில் பாதுகாப்புச் செயலாளர் என்ற முறையில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு பிரதேசங்களுக்கு கோட்டாபய ராஜபக்ஷ பயணித்தாராயினும், நாட்டின் ஜனாதிபதியான பின்னர் அவர் யாழ்ப்பாணப் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை. யாழ்ப்பாணம் என்றால் அவருக்கு ஓர் அலர்ஜிதான். 'பாதுகாப்பு போபியாவோ' தெரியவில்லை. 'தெனாலி' படத்தில் கமலஹாசனுக்கு இருந்தமை போன்ற பயங்களின் வரிசையில் கோட்டாவுக்கு 'யாழ் பயம்' இருக்கின்றது போலும்.

ஜனாதிபதியாக இருந்த போதே யாழ்ப்பாணத்திற்கு வராமல் தவிர்த்தவர் இப்போது ஏதோ ஒரு நீதிமன்ற விசாரணைக்காக யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்று எதிர்பார்ப்பது அபத்தம் போன்றே தோன்றுகின்றது.

* * *

# ஒன்றாக முன்னோக்கி

# ரயில்வே திணைக்களச் சொத்துகளுக்கு 300 மில்லியன் டொலர் வரையில் சேதம்!

## வடக்கு, கிழக்கு, மலையக ரயில் சேவைகள் இப்போதைக்கு இல்லை என்றும் அறிவிப்பு

”இலங்கையில் இயற்கை அனர்த்தங்களால் ரயில்வே திணைக்களச் சொத்துகளுக்கு 300 மில்லியன் டொலர் வரையில் சேதம் ஏற்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்துக்கான ரயில் சேவையை எப்போது மீள ஆரம்பிப்பது என்று குறிப்பிட முடியாது. அந்தளவுக்கு ரயில் பாதைகள் சேதமடைந்துள்ளன.”

– இவ்வாறு ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய தெரிவித்தார்.

நாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த ரயில் பாதைகள், பாலங்கள் தற்போது புனரமைக்கப்படுவது தொடர்பில் ஊடகங்களிடம் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்களால் சகல பிரதேசங்களுக்குமான ரயில் பாதைகள், பாலங்கள் சேதமடைந்துள்ளன.

ரயில் சேவைகள் தற்போது வரையறுக்கப்பட்ட வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. ரம்புக்கனை, பொல்காஹெவல ஆகிய பகுதிகளின் ரயில் பாதைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. கொழும்பு கோட்டை பரயில் நிலையத்தில் இருந்து இந்தப் பகுதிகளுக்கான அலுவலக ரயில் சேவைகள் நேற்று புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்துக்கான ரயில் சேவை எப்போது மீள ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிட முடியாது. மலையகத்துக்கான ரயில் பாதைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. குறிப்பாக மாத்தளை – கண்டி ரயில் பாதைகள் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

மலையக ரயில் பாதைகள் மற்றும் பாலங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பீடுவதற்கு இன்னும் 2 மாதங்களேனும் செல்லும். மணிசரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் ஒரு சில பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இயற்கை அனர்த்தங்களால் ரயில்வே திணைக்களத்தின் சொத்துகளுக்கு (பாலம், வீதிகள், சமிஞ்சை கட்டமைப்பு, ரயில் நிலையங்கள்) 300 மில்லியன் டொலர் வரையில் சேதம் ஏற்பட்டுள்ளது. ரயில் சேவையை இயலுமான வகையில் வழமைக்குக் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பேரிடரை வைத்து...**

“இலங்கை முழுவதிலும் அண்மையில் ஏற்பட்ட இயற்கைப் பேரனர்த்தம் வரலாற்றில் பெரும் அழிவாகப் பதியப்பட்டுள்ளது. இந்தப் பேரிடரில் பலர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காணாமல்போயுள்ளனர். பெருமளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பேரனர்த்தத்தை வைத்து அரசியல் செய்வதில் சில எதிர்க்கட்சிகள் மும்முரமாக உள்ளன. இப்படியான நடவடிக்கையைக் கைவிடுமாறு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் நடந்தது இயற்கைப் பேரனர்த்தம். இதற்கு அரசு மீது குற்றம் சுமத்த முடியாது.

இந்தப் பேரழிவில் இருந்து இலங்கை மீண்டெழ உதவுமாறு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

இலங்கையில் இயற்கைப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பண்டாரநாயக்க நினைவு தேசிய அறக்கட்டளை, அரச நிவாரண நிதிக்கு 250 மில்லியன் ரூபா நன்கொடையை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**மண்சரிவு...**

குருநாகல், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த மண்சரிவு அபாய முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.


வங்காளத் திரைப்பட மேதை றித்விக் கடக் நூற்றாண்டு நினைவாக...!

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் 20 ஆவது திரைப்படக் காட்சி...!

**ஜுக்தி தக்கோ ஆர் கப்போ**

( யுக்தி, விவாதம், கதை )
114நி. / 1974 / வங்காளம்
நெறியாளர் : றித்விக் கடக்




13.12.2025 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு,
18/2, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணத்திலுள்ள
'எங்கட புத்தகங்கள் இல்ல'த்தில் நடைபெறும்.

அனுமதி இலவசம் !

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# திருத்தப் பட வேண்டியது!

நேற்று சர்வதேச மனித உரிமைகள் தினம். அதனை ஒட்டி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன மனித உரிமைகள் மோசமாக மீறப்படுகின்ற ஒரு விடயத்தை விசேடமாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

இந்த நாட்டில் நீண்ட காலம் ஆட்சி செய்த ஒரு கட்சியின் தவிசாளர் அவர். அந்தக் கட்சி ஆட்சி செய்த காலத்தில் அந்த அரசுகளில் அவரும் கூட முக்கிய தலைவராகவும் இருந்தவர். தங்களது ஆட்சிக் காலத்தில் தாங்கள் கவனிக்கவே தவறிய ஒரு மோசமான மனித உரிமை மீறல் குறித்து அவர் இப்போதாவது கவனித்து பிரஸ்தாபிக்க முன் வந்திருக்கின்றமை வரவேற்கத் தக்கதே.

ஒருவரைக் கைது செய்து விசாரணை முடியும் வரை அவரைத் தடுப்புக் காவலில் வைக்க நமது அரசமைப்பு அனுமதிக்கிறது.

ஆனால் இதனையே வசதியாகப் பயன்படுத்தி கண்மூடித்தனமாக பலரும் தொடர்ந்து - நீண்ட காலம் - தடுத்து வைக்கப்படுகிறார்கள் என்ற விடயத்தை அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

கைதாவோர் குற்றவாளிகளாகக் காணப்படும் விகிதாசாரம் ஜப்பானில் 98 வீதமாகும். அங்கு தொடுக்கப்படும் வழக்குகளில் 98 வீதமானவற்றில் குற்றவாளிகளே கைதாகி தடுத்து வைக்கப்படுகிறார்கள். இந்த வீதாசாரம் - அதாவது தண்டனை வழங்கும் விகிதம் - இந்தியாவில் 57 முதல் 58 சதவீதம் என்று குறிப்பிடும் அவர், நமது நாட்டில் அது வெறுமனே இரண்டு வீதம் மட்டுமே என்று அவர் விவருக்கின்றார்.

அதாவது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றவர்களில் 98 வீதமானோர் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படாமல் விடுவிக்கப்படுகிறார்கள். இன்னமும் விளக்கமாகச் சொல்வதானால் குற்றவாளிகளாகக் காணப்பட முடியாத பெரும்பான்மையோரே கைது செய்யப்பட்டு, வீணே தடுத்து வைக்கப்படுகிறார்கள் என்பதுதான் இதன் அர்த்தம்.

இப்படி இறுதி தீர்ப்பு வருவதற்கு முன்னர் மூன்று மாதங்கள் முதல் 25 ஆண்டுகள் வரை ஒருவரை கைது செய்து தடுத்து வைத்திருந்தால், இறுதியில் அவர் விடுவிக்கப்படும் போது, அவர் விடயத்திலேயே பெரும் அடிப்படை உரிமை மீறல் இடம்பெற்றிருக்கின்றது என்றாகும். இலங்கையின் அரசமைப்புச் சட்டங்களோ, நீதித் துறையோ அதுபற்றிக் கவலைப்படுவதே இல்லை என்பதைத்தான் அவர் தமது உரையில் சுட்டிக்காட்டுவதாகும்.

மனித உரிமைகள் மீறப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை இப்படித்தான் மீறுகின்றன என்பதை அவர் கோடி காட்டுகிறார்.

வேறெங்கோ நாடுகளில் அவற்றின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட சட்டங்களை இலங்கையில் கொண்டு வந்து பொருத்தி தவறிழைக்கின்றார்கள் என்பது வஜ்ரா அபேவர்த்தனவின் வாதமாக இருக்கின்றது.

மக்களின் சுதந்திரத்தையும் அடிப்படை மனித உரிமைகள் உட்பட்ட உரித்துக்களையும் உறுதிப்படுத்த வேண்டிய நாடும் அரசும் அரசமைப்பும் இப்படி மக்களின் உரிமைகளை தொடர்ந்து மீறிக் கொண்டிருப்பது ஏற்க முடியாதது. ஏதோ ஒரு கட்டத்தில் இது திருத்தப்பட வேண்டும்.



# வடக்கு-கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தினால் உலருணவுப் பொதிகள் தொடர்ந்து வழங்கல்

டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக வடக்கிலும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் பல கிராமங்கள் நீரில் மூழ்கியமையால் அங்கிருந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கு – கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தால் உலருணவு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன். அதன்படி கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் (64 குடும்பங்கள்), நாச்சிக்குடா (57 குடும்பங்கள்), மன்னார் மாவட்டத்தின் கள்ளியடி (60 குடும்பங்கள்), சன்னார் (56 குடும்பங்கள்), முல்லைத்தீவின் முத்தையன்கட்டு (62 குடும்பங்கள்), ஓதியமலை (59 குடும்பங்கள்) மற்றும் வவுனியா மாவட்டத்தின் வடகாடு, கணேசபுரம், பூவரங்குளம் (132 குடும்பங்கள்) ஆகிய கிராமங்களிலும் இந்நிவாரண பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிவாரணப் பணிகளில் வடக்கு கிழக்கு மறுவாழ்வு இயக்குனர் சுகிர்தன், வடக்கு கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் உறுப்பினர்கள், இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், செயலாளர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவிகரன், சத்தியலிங்கம், அந்தந்த பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் பல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

















# Re building Sri lanka திட்டத்திற்கு 1893 மில்லியன் ரூபா நிதி உதவி



டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள Re building Sri lanka திட்டத்திற்கு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து இலங்கையர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் 1893 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

சூறாவளியால் சேதமடைந்த வர்த்தகங்கள் மற்றும் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான திட்டத்தை தயாரிப்பது குறித்து இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக் குழுவின் தலைமையில் அனைத்து காப்புறுதி நிறுவனங்களின் தலைவர்களின் பங்கேற்புடன் கலந்துரையாடலொன்று நடைபெற்றதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த அனர்த்த சூழ்நிலையில் சேதமடைந்த வர்த்தகங்கள், சொத்துக்கள் மற்றும் உயிர்களுக்கு உடனடி இழப்பீடு வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை அனைத்து காப்புறுதி நிறுவனங்களும் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின்படி,சொத்துக்களுக்கு ஏற்பட்ட சிறிய சேதங்களுக்கு உடனடி இழப்பீடு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாரிய சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்த பின்னர் இழப்பீடு வழங்கப்படும் என்றும் அதுவரை இழப்பீட்டின் ஒரு பகுதி உடனடியாக வழங்கப்படும் எனவும் காப்புறுதி நிறுவன பிரதிநிதிகள் தெரிவித்ததாகவும் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

# நிறுத்தப்பட்ட உயர்தரப் பரீட்சைக்கான திருத்தப்பட்ட திகதிகள் வெளியாகின

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம்/ Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය - 2025 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2025

General Certificate of Education (Advanced Level) Examination - 2025

සංශෝධිත කාලසටහන /திருத்தப்பட்ட நேரஅட்டவணை / Amended Timetable

| | උදෑසන වාරය / முற்பகல் / Morning Session | සවස් වාරය / பிற்பகல் / Afternoon Session |
|---|---|---|
| | 2026 ජනවාරි 12 සඳුදා / 2026 ஜனவரி 12 திங்கட்கிழமை / Monday, 12th January 2026 | |
| 16 | 0830 - 1140<br>28 ගෘහ ආර්ථික විද්‍යාව II / மனைப் பொருளியல் II / Home Economics II | 1300 - 1500<br>20 තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය I / தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பவியல் I / Information & Communication Technology I |
| | 2026 ජනවාරි 13 අඟහරුවාදා / 2026 ஜனவரி 13 செவ்வாய்க்கிழமை / Tuesday, 13th January 2026 | |
| 17 | 0830 - 1140<br>33 ගිණුම්කරණය II / கணக்கீடு II / Accounting II<br>78 අරාබි II / அரபு II / Arabic II<br>86 චීන II / சீன மொழி II / Chinese II | 1400 - 1710<br>25 ශ්‍රී ලංකා ඉතිහාසය I / இலங்கை வரலாறு I / History of Sri Lanka I<br>79 මලේ II / மலாய் II / Malay II |
| | 2026 ජනවාරි 14 බදාදා / 2026 ஜனவரி 14 புதன்கிழமை / Wednesday, 14th January 2026 | |
| 18 | 0830 - 1140<br>20 තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය II / தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பவியல் II / Information & Communication Technology II | 1300 - 1500<br>84 හින්දි I / ஹிந்தி I / Hindi I<br>88 කොරියන් I / கொரியன் I / Korean I |
| | 2026 ජනවාරි 16 සිකුරාදා / 2026 ஜனவரி 16 வெள்ளிக்கிழமை / Friday, 16th January 2026 | |
| 19 | 0830 - 1140<br>07 ගණිතය I / கணிதம் I / Mathematics I<br>11 උසස් ගණිතය I / உயர் கணிதம் I / Higher Mathematics I<br>0830 - 1030<br>48 ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය I / கிரேக்க உரோம நாகரிகம் I / Greek and Roman Civilization I<br>83 රුසියන් I/ ரூசியன் I/ Russian I<br>87 ජපන් I / ஜப்பான் I/ Japanese I | 1400 - 1710<br>22 භූගෝල විද්‍යාව I / புவியியல் I / Geography I |
| | 2026 ජනවාරි 17 සෙනසුරාදා / 2026 ஜனவரி 17 சனிக்கிழமை / Saturday, 17th January 2026 | |
| 20 | 0830 - 1140<br>07 ගණිතය II / கணிதம் II / Mathematics II<br>83 රුසියන් II / ரூசியன் II / Russian II<br>87 ජපන් II / ஜப்பான் II / Japanese II | 1300 - 1610<br>22 භූගෝල විද්‍යාව II / புவியியல் II / Geography II |
| | 2026 ජනවාරි 19 සඳුදා / 2026 ஜனவரி 19 திங்கட்கிழமை / Monday, 19th January 2026 | |
| 21 | 0830 - 1140<br>84 හින්දි II / ஹிந்தி II / Hindi II<br>88 කොරියන් II / கொரியன் II / Korean II | 1300 - 1500<br>29 සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I / தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I / Communication & Media Studies I |
| | 2026 ජනවාරි 20 අඟහරුවාදා / 2026 ஜனவரி 20 செவ்வாய்க்கிழமை / Tuesday, 20th January 2026 | |
| 22 | 0830 - 1140<br>11 උසස් ගණිතය II / உயர் கணிதம் II / Higher Mathematics II<br>48 ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය II / கிரேக்க உரோம நாகரிகம் II / Greek and Roman Civilization II | 1400 - 1710<br>29 සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II / தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II / Communication & Media Studies II |

அனர்த்த சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்ட உயர்தரப் பரீட்சைக்கான திருத்தப்பட்ட அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

நடைபெறாத பாடங்களை 2026 ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முதல் ஜனவரி 20 ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





# உயர் நீதிமன்ற நீதியரசராக கிஹான் குலதுங்க நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கே.எம். கிஹான் ஹிமான்ஷ் குலதுங்க, நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் உயர் நீதிமன்ற நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.



# மழையால் முற்றாக பாதிப்படைந்த மருதங்கேணி–பருத்தித்துறை வீதி

**(மரியசீலன் திலைக்ஸ்)**

வடமராட்சி கிழக்கில் பெய்து வரும் தொடர் மழையால் மருதங்கேணி பருத்தித்துறை வீதி முற்றாக பாதிப்படைந்துள்ளது

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பெருமளவு நிதியில் போடப்பட்ட இந்த வீதி இன்றுவரை தரமற்ற வீதியாகவே காணப்படுகின்றது.

இந்த வீதி புனரமைப்பின் போது இடம்பெற்ற மோசடி தொடர்பில் விரிவான விசாரணை மேற்கொண்டு, வீதியை புனரமைப்பு செய்து தருமாறு மக்கள் பலமுறை கோரிக்கை விடுத்தும் பலனளிக்கவில்லை.

மருத்துவ நோயாளிகள், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் என பலரும் பயணம் செய்யும் இந்த வீதி சேதமடைந்ததாகவே காணப்படுகின்றது.

தற்போது நாட்டில் பெய்துவரும் தொடர் மழை, வடமராட்சி கிழக்கிலும் பெய்துவருகின்றது

இதனால், மருதங்கேணி – பருத்தித்துறை வீதி பயணிக்க முடியாமல் காணப்படுகின்றது.

நீண்டகாலமாக சேதமடைந்த இந்த பிரதான வீதியை புனர் நிர்மானம் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.





# கோட்டாபய யாழ் வந்து சாட்சியமளிக்க ஏன் முடியாது? காரணங்களுடன் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்க உத்தரவு

## காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் வழக்கில் கட்டளை





யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடரிலும் சாட்சியம் அளிக்க அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவதற்கு என்ன அச்சுறுத்தல் இருக்கிறது என்பதனைத் தெரிவிக்கும் நியாமான காரணங்களுடன் சத்திய கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து முதல் நாள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அதனை அடுத்து லலித் மற்றும் குகன் ஆகியயோரின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுமீதான விசாணையின் போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின.

அந்நிலையில் இந்த வழக்கு விசாரணைகளின் போது கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் இணைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்குவிசாரணைகளின்போது, கோட்டாபய ராஜபக்ஷவை மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு மன்று உத்தரவிட்டது.

பாதுகாப்புக் காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வர முடியாது என தொடர்ச்சியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்து வந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, கோட்டாபய ராஜபக்ஷ நிகழ்நிலை (ஒன் லைன்) ஊடாகத் தோன்றி மன்றில் சாட்சியம் அளிக்க தனது சட்டத்தரணிகள் ஊடாக மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனை அடுத்து, கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தருவதில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் சத்திய கடதாசியை மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட மன்றம், அடுத்த வழக்கு விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி 06ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.



# பாதுகாப்பான பாலர் பாடசாலைகள் 16ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும்

செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க பாதுகாப்பானவை என உறுதிப்படுத்தப்பட்ட அனைத்து பாலர் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்கள், எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதி முதல் மீளத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

# பாரதி பாட்டை பக்குவப் படுத்துவோம்!

**(இன்று மகாகவி பாரதியாரின் பிறந்த தினம்.
அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது)**



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

புரட்சிக்கும் பாரதி புதுமைக்கும் பாரதி
அயர்ச்சியை நாளும் அகற்றினான் பாரதி
துணிவுக்கும் பாரதி துடிப்புக் பாரதி
பணிவுக்கும் பாடினான் பக்திக்கும் பாடினான்

தமிழன்னை ஈன்ற தவப்புதல்வன் பாரதி
தமிழதனை அமுதமாய் கண்டவன் பாரதி
தமிழொன்றே பெருமை எனவுரைத்தான் பாரதி
தலைநிமிர வாழப் பலவுரைத்தான் பாரதி

பன்மொழிகள் கற்றான் பற்றினான் தமிழை
பக்தியை மனத்தில் இருத்தினான் பாரதி
கடவுளை நம்பினான் கண்ணியம் காத்தான்
கடமையைச் செய்யென கட்டளை இட்டான்

வேதம் படித்தான் புராணம் படித்தான்
வேண்டாக் கருத்தை விலக்கியே நின்றான்
பாதகம் கடிந்தான் பக்குவம் உரைத்தான்
பார்க்கும் அனைத்திலும் பரம்பொருள் கண்டான்

நாத்திகம் பேசிடும் ஆத்தீகன் பாரதி
வேண்டா அனைத்தையும் விலக்கிடச் சொன்னான்
கடவுளை வெறுத்திடச் சொல்லவும் இல்லை
கள்ளம் போக்கிடல் கட்டாயம் என்றான்

கண்ணனைப் பாடினான் சக்தியைப் பாடினான்
கீதையை மனத்தில் இருத்தியே வாழ்ந்தான்
பாரத தேசத்தைப் பராசக்தி என்றான்
மண்ணினைத் தெய்வமாய் மனமதில் கொண்டான்



பாரதி சிந்தனை பரந்தது விரிந்தது
பாப்பாவைப் பாடுவான் பரமனைப் பாடுவான்
ஏய்த்திடு மாந்தரை இகழ்ந்துமே பாடுவான்
எவருக்கும் அஞ்சா பாடினான் பாரதி

வள்ளுவன் கம்பனை மனமதில் இருத்தினான்
இளங்கோக் கவிஞனை ஏந்தியே நின்றான்
தெள்ளிய திருமுறை உள்ளத்தி லிருத்தினான்
திருமால் அடியார் பாடலும் விரும்பினான்

வேதிய குலத்தில் பிறந்தவன் பாரதி
வேதம் நன்றாய்க் கற்றவன் பாரதி
சாதியை எதிர்த்து சன்னதம் கொண்டு
சமத்துவம் பேசி நின்றவன் பாரதி

பாட்டில் புரட்சி செய்தவன் பாரதி
ஏட்டில் புரட்சியை காட்டியே நின்றவன்
நாட்டில் புரட்சிக்கு வித்தினை விதைத்தவன்
நற்றமிழ் கவிஞனாய் ஒளிர்கிறான் பாரதி

அஞ்சா நெஞ்சனாய் பாரதி வாழ்ந்தான்
அவனிடம் சரஸ்வதி ஐக்கிய மாகினாள்
அன்னைத் தமிழில் கவிமழை பொழிந்தான்
அனைத்தும் தமிழின் பொக்கிஷம் ஆனது

பாஞ்சாலி சபதம் வியந்திட வைக்கும்
கீதையின் சிந்தனை உயர்ந்திடு படைப்பே
குயிலின் பாட்டு பாரதி தத்துவம்
ஆத்தி சூடியோ அவனது வித்துவம்

பாப்பாப் பாட்டு எத்தனை அறிவுரை
கேட்கக் கேட்க கருத்துகள் விரிந்திடும்
பாரதி வரமாய் தமிழுக்கு வாய்த்தான்
பாரதி பாட்டை பக்குவப் படுத்துவோம் !

# தண்ணீர் போத்தல்களை கூடிய விலைக்கு விற்ற வணிக நிறுவனத்துக்கு 5 லட்சம் ரூபா அபராதம்

## நுவரெலியா நீதிவான் நீதிமன்றம் அதிரடி உத்தரவு





(மஸ்கெலியா விசேட நிருபர்)

நுவரெலியாவில் அதிக விலைக்கு தண்ணீர் போத்தல்களை விற்ற ஒரு வணிக நிறுவனத்திற்கு ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நுவரெலியாவில் நுகர்வோர் விவகார அதிகாரசபை இது தொடர்பில் சோதனைகளை நடத்தியிருந்தது.

அதன்படி, நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் மேற்படி வணிக நிறுவனத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது சம்பந்தப்பட்ட நிறுவனம் அதிக விலைக்கு குடி தண்ணீர்ப் போத்தல்களை விற்பனை செய்ததை ஒப்புக் கொண்டது. அதனையடுத்து நீதிமன்றம் ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதித்தது.

கூடுதலாக, அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்றதற்காக மூன்று வர்த்தகர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று இதுபோன்ற பதினான்கு வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும் நீதிமன்றம் மொத்தமாக 8 லட்சத்து 80 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பேரிடர்களின் போது நுகர்வோர் சமூகத்தைப் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ், நுவரெலியா மாவட்ட செயலாளர் திருமதி துஷாரி தென்னகோனின் அறிவுறுத்தலுக்கமைய, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் மத்திய மாகாண உதவி இயக்குநர் திரு. கே.ஏ. பிரதீப் களுத்துறைஆராச்சி, மூத்த புலனாய்வு அதிகாரி அமில ரத்நாயக்க ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சோதனை நடவடிக்கையில் விசாரணை அதிகாரிகள் எம்.முத்து சிவானோ, டபிள்யூ.எம்.எச்.ஜி.காமினி, எச்.டி.டபிள்யூ.கே.எம்.ஆர். பி. ஹபுஹின்ன, எஸ்.எம்.ரஸ்லான், ஐ.என். எம்.டி. காண்டேவத்த, எம்.சி.டி.திசாநாயக்க ஆகியோர் பங்கேற்றனர்.




# அலுவலகக் கடமைகளைச் செய்ய டிராக்டரில் பயணிக்கும் தவிசாளர்

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம். மஹ்தி தற்போது தனது அலுவலக கடமைகளை நகர சபையின் டிராக்டரில் சென்று நிறைவேற்றி வருகின்றார்.

தவிசாளருக்கான அலுவலக வாகனம் பழுதடைந்து கைவிடப்பட்ட நிலையில் நேற்று வாகனம் இன்மையால் நகர சபையின் வழமையான பணிகள் முடங்கி விடக் கூடாது என்பதற்காக டிரக்டரில் சென்று மக்களது தேவைகளை நிறைவேற்றுகின்றமையோடு அலுவலக கடமைகளையும் அதில் சென்றே நிறைவேற்றி வருகின்றார்.

# அதிகரித்து வருகின்ற சிங்களக் குடியேற்றங்களால் வவுனியா வடக்கிலிருந்து தமிழர்கள் வெளியேற்றம்

## 23 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்கிறார் ரவிகரன் எம்.பி.







**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கில் தற்போது அதிகரித்துள்ள சிங்களக்குடியேற்றங்கள் மற்றும் காணி அபகரிப்பு நெருக்கடிகள் காரணமாக வவுனியா வடக்கிலிருந்து அதிக எண்ணிக்கையில் தமிழ் மக்கள் வெளியேறியுள்ளனர் எனவும், கிராமங்களில் மக்கள் இன்மையினால் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் மட்டும் 23 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் சில பாடசாலைகள் மூடப்படும் நிலையில் காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டியுள்ளார் ரவிகரன் எம்.பி.

எனவே வவுனியா வடக்கில் இடம்பெறும் திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றங்கள் மற்றும் அபகரிப்புக்களைத் தடுக்குமாறும், தமிழ்மக்கள் தமது பூர்வீக நிலங்களில் வாழும் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துமாறும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

வவுனிய மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையிலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவெள வருமாறு:-

வடமாகாணத்தில் அதிக எண்ணிக்கையான பாடசாலைகள் மூடப்பட்ட கல்விவலயமாக வவுனியா வடக்கு கல்வி வலயம் காணப்படுகின்றது.

அந்தவகையில் வவுனியா கல்வி வலயத்தில் 23பாசாலைகள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகளவில் பாடசாலைகள் மூடப்படுவதற்கு காரணமென்ன? அந்தக்காரணத்தினை அதிகாரிகளான நீங்கள் எம்மிடம் தெரிவித்தாலேயே எம்மாலும் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

குறிப்பாக வவுனியா வடக்கில் பெரும்பான்மை இனத்தவர்களின் அத்துமீறிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதால் எமது மக்கள் வெளியேறுகின்றனர். அத்தோடு பாடசாலைகளில் வளப்பற்றாக் குறைகளும் காணப்படுகின்றன. இந்தக் காரணங்களினாலேயே வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இவ்வாறு பாடசாலைகள் அதிகளவில் மூடப்பட்டுள்ளன – என்றார்.

இந்நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் இதன்போது பதிலளிக்கையில் –

எம்மைப் பொறுத்தவரைக்கும் வளப் பற்றாக்குறை காரணமாக எந்தப் பாடசாலையும் மூடப்படவில்லை. மாணவர்கள் இல்லாமையினாலேயே பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அந்த வகையில் வவுனியா வடக்கு கல்விவலயத்தில் மூடப்பட்ட 23பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகளை, ஆளுநரையும் அழைத்துச் சென்று பார்வையிட்டிருந்தோம்.

அந்த வகையில் அந்தப்பகுதிகளில் மக்கள் இல்லாமையினாலேயே பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்களின் தொகை குறைவடைவதால் மூடப்படுகின்ற நிலையிலும் இன்னும் சில பாடசாலைகள் காணப்படுகின்றன – என்றார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

வவுனியா வடக்கு என்பது மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசமாகும். இங்கு சிங்கள குடியேற்றங்களினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள், காணிகள் அபகரிப்பால் ஏற்படுகின்ற பாதிப்புக்களினால் இந்தப்பிரதேசத்திலிருந்து எமது மக்கள் வெளியேறிவருகின்ற மிகமோசமான பாதிப்பு நிலை காணப்படுகின்றது.

இந்தவிடயத்தில் ஆளுநரும், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் கவனஞ் செலுத்தவேண்டும். வவுனியா வடக்கில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கள் தொடர்பில் ஒரு மாதகாலத்திற்குள் ஆராயப்படுமென பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார். அதனை விரைந்து மேற்கொள்ளுமாறு பிரதி அமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்.

வவுனியா வடக்கில் சிங்களக்குடியேற்றங்கள் மற்றும் அபகரிப்பு நெருக்கடிகளைத் தடுத்து எமது தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழிடங்களிலிருந்து வெளியேறாமல் வாழ்வதற்குரிய வாழ்வுரிமையைஉறுதிப்படுத்துமாறுகேட்டுக்கொள்கின்றேன்.

இதனைவிட வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மிக அதிகளவில் வளப்பற்றாக் குறைகளும் காணப்படுகின்றன. அதனை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மறுக்கமுடியாது. எனவே வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளின் வளப் பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்கு வடமாகாணகல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும். – எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் 2025; தமிழை கொண்டாடிய வரலாற்றுச் சங்கமம்



கனடாவில் பெருமைக்குரிய தருணமாக, கடந்த 6, 7 ஆம் திகதிகளில் டொரோண்டோவின் மல்வென் பமிலி ரிசோஸ் சென்டரில் நடைபெற்ற டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் மறக்க முடியாத ஒரு புதிய வரலாற்றை படைத்துள்ளது.

கனடாவில் உள்ள பல்வேறு தமிழ் பேசும் சமூகங்கள் இணைந்து ஒருங்கிணைத்த இந்த அரங்கம் தமிழ் இலக்கியத்தில் புதிய அத்தியாயத்தைத் ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்வின் சமூகப் பங்காளர்களாக கனடியத் தமிழர் பேரவை மற்றும் ஐக்கிய இலங்கை முஸ்லிம் பேரவை – கனடா இணைந்து மதம், இனப்பாகுபாடு, பின்னணி, வேறுபட்ட நம்பிக்கைகளைத் தாண்டி தமிழ்மொழியை ஒன்றுபட்ட உணர்வுடன் கொண்டாடிய சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்திருந்தது.

ஒரே கூரையின் கீழ் தமிழ்மொழி மீதான ஏகோபித்த பற்றே அனைவரையும் ஒன்றாக இணைத்திருந்தது.

இரு நாள்கள் முழுவதும் கடும் குளிர்காலத்தையும் பொருட்படுத்தாமல் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு அரங்கத்தை உயிர்ப்புடன் நிறைத்திருந்தனர்.

6 புதிய தமிழ் நூல்கள் இங்கு வெளியிடப்பட்டதத்துடன், பல தமிழ் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் வாசகர்களுடன் அர்த்தமுள்ள உரையாடல்களில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வின்போது கிடைக்கப்பெற்ற மிகுந்த ஆதரவு நம் சமூகத்தில் புத்தகங்கள், சிந்தனைகள் மற்றும் கதை சொல்லலுக்கான அதிகரிக்கும் ஆர்வத்தை தெளிவாக வெளிப்படுத்தி இருந்தது.

பெருமை, பொறுப்பு மற்றும் நம்பிக்கை கொண்ட ஒரு சமூகத்தின் அரிய தருணத்தை நாம் அனைவரும் நேரில் கண்டோம். டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் புத்தகங்களை மட்டுமல்ல தமிழரின் அடையாள வலிமையையும், பிரிவை விட ஒன்றிணைவதைத் தீர்மானிக்கும் சமூகத்தின் அழகையும் வெளிப்படுத்தியிருந்தது.

இந்த வரலாற்று நிகழ்வை சாத்தியமாக்கிய அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் தெரிவித்துள்ளது.

ஆலோசனைக் குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் அர்ப்பணிப்பு, அரங்கத்தின் ஒவ்வொரு நிகழ்வையும் சிறப்பாக வடிவமைத்திருந்தது.

ஆதரவு அமைப்புகள், நிகழ்வை நிறுவுவதற்கான ஆதரவாளர்கள், பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அனுசரணையாளர்களின் ஒத்துழைப்பு இந்த அரங்கத்தை தேசிய மட்டத்துக்கு உயர்த்தியிருந்தது. ஊடக ஆதரவாளர்கள் நிகழ்வின் செய்தியை விரிவுபடுத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வில் தன்னார்வலர்கள் ஒவ்வொரு வருகையாளருக்கும் நினைவில் நிற்கும் அனுபவத்தை உருவாக்கியிருந்தனர். அவர்கள் அனைவரின் கூட்டு பங்களிப்பே இந்த கனவை நனவாக்கியுள்ளது.

டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் 2025 ஒரு புதிய வரலாறை படைத்திருந்தது. அதன் ஒரு பகுதியாக நீங்கள் அனைவரும் இருந்தீர்கள். தமிழையும், நமது மக்களையும், நமது இலக்கியப் பயணத்தையும் கொண்டாடியதற்காக இதில் எம்மோடு இணைத்துக்கொண்ட அனைவருக்கும் எமது நன்றி என டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மிகவு ஒரு ஆரம்பம் மட்டுமே. வருங்கால சந்ததிகளுக்காக தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தை உயர்த்திப் பாதுகாக்க நாம் தொடர்ந்தும் இணைந்து செயல்படுவோம் எனவும் ரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் தெரிவித்துள்ளது.

# நிந்தவூர் பிரதித் தவிசாளர், உறுப்பினர் மீது தாக்குதல் 2 பேர் கைது; எம்.பி. உட்பட 10 பேரைத் தேடி வேட்டை

( க.சரவணன்)

நிந்தவூர் பிரதேச சபையினுள் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழு ஒன்று உள்நுழைந்து பிரதி தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில் தலைமறைவாகிய நிலையில் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை பதில் நீதவான் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

அதேவேளை தலைமறைவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட 10 பேரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது:-

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் அண்மையில் பதவி விலக்கப்பட்டார். இந்த நிலையில் பிரதி தவிசாளரான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை சேர்ந்த சட்டத்தரணி எம்.ஜ.இர்பான் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பகல் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் பிரதி தவிசாளர் அறையில் உள் நுழைந்து சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாது என தெரிவித்து பிரதி தவிசாளருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்ட நிலையில் அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

அங்கு சென்ற பொலிஸார் இது நிர்வாக ரீதியான பிரச்சினை. எனவே கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற பிரதி பணிப்பாளரிடம் முறையிட்டு இதற்கான தீர்வைப் பெறுமாறு வாக்குவாதத்தில் ஈடுபட்ட உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியதையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

இதனை தொடர்ந்து பிரதி தவிசாளர் தனது சபை கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பிற்பகல் 2.00 மணியளவில் பிரதி தவிசாளரின் காரியாலயத்துக்குள் அத்து மீறி உள் நுழைந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தலைமையிலான 30 பேர் கொண்ட அடியாள்கள் மேசையில் இருந்த பொருள்களை உடைத்து எறிந்து, பிரதித் தவிசாளர் மற்றும் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்படுகின்றது. இதில் இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதல் நடத்திய கும்பல் அங்கிருந்து தப்பி ஓடியுள்ள நிலையில் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட 12 பேரை அடையாளம் கண்டு அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வந்தனர். சம்பந்தப்பட்டோர் தலைமறைவாகியுள்ளனர் என்பது பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தலைமறைவாகியுளவர்களில் இருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்தனர். இருவரையம் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில நேற்று ஆஜர்படுத்திய போது இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை தலைமறைவாகியுள்ள ஏனையவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமையுடன் நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கு சபாநாயகரிடம் அனுமதியை பெறும் நடவடிக்கையின் முன்னெடுத்துள்ளனர் எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



## பதிவாளர் தற்கொலை

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் உதவி நிதியாளராக கடமையாற்றி வந்த எச்.எஸ்.டில்ஷான் பெரேரா (வயது 37) நேற்றுக் காலை தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் கண்டியைச் சேர்ந்தவர். 7 வருட காலமாக இங்கே கடமையாற்றி வருகிறார். மன அழுத்தம் காரணமாக அவர்தற்கொலை செய்திருக்கலாம் எனவும் அறியமுடிகின்றது. இவர் நீண்டகாலமாக தமது சொந்த ஊரிற்கு இடமாற்றம் கேட்டு வந்த நிலையில் அது இதுவரை கிடைக்கவில்லை. அத்துடன் அவரது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அவருக்கு இருந்த நண்பர் ஒருவரும் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். இக்காரணங்களால் இவரிற்கு ஏற்பட்ட மன அழுத்தமே தற்கொலைக்கான காரணியாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

## நிவாரணப் பொருள்களுடன் வந்தடைந்த ரஷ்ய விமானம்




அனர்த்த நிவாரண உதவிகளை ஏற்றிய ரஷ்யாவின் விசேட சரக்கு விமானம் ஒன்று நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

35 மெற்றிக் தொன் எடையுள்ள இந்த உதவிப் பொதிக்குள் நடமாடும் மின் உற்பத்தி நிலையம், சமையல் எண்ணெய், சீனி, அரிசி மற்றும் கூடாரங்கள் என்பன உள்ளடங்குகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலுஷியன் ஐ.எல் – 76 ரக பாரிய சரக்கு விமானம் மூலமே இந்த உதவிகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் ஜகாரியன், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக்க, பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர, கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் எயர் வைஸ் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



# மூதூர் செங்கல் சூளைகளின் தொழிலாளர்கள் தொழிலை ஆரம்பிக்க உதவி கோருகின்றார்கள்





**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட செங்கல் சூளைத் தொழிலாளர்கள், மீளத் தமது தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசு உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூதூர் பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக செங்கல் சூளைகளில் இருந்த செங்கற்கள் மற்றும் மூலப்பொருள்கள் என்பன வெள்ள நீரினால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இதனால் தமது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டிருக்கின்றது, எனவே தொழிலை மீள ஆரம்பிக்க அரசு எமக்கு உதவ வேண்டும் என செங்கல் சூளைத் தொழிலாளர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூதூர் பிரதேசத்தில் இருதயபுரம், ஷாபிநகர், ஜின்னாநகர், அம்மன்நகர், மணற்சேனை, நீலாப்பொல ஆகிய பகுதிகளில் செங்கல் சூளைத் தொழில் இடம்பெற்று வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறும் கட்டுமானங்களுக்குத் தேவையான செங்கற்களின் பெரும்பகுதி இப்பகுதிகளில் இருந்தே பூர்த்தி செய்யப்படுகின்றன.

# திருகோணமலை நீலாபொல பகுதியில் கடற்கரை போல் மாறியுள்ள வயல்கள்!




**(எஸ்.கீதபொன்கலன்)**

டித்வா புயல் மற்றும் மழை வெள்ளம் என்பவற்றால் திருகோணமலை நீலாபொல பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் மணலால் முழுமையாக மூடப்பட்டு கடற்கரை போல் மாறியுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீலாப்பொல பகுதியில் மகாவலி ஆற்றின் அணைக்கட்டு உடைந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக அதனை அண்டிய பகுதியில் உள்ள 80 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்நிலங்கள் மணலால் நிரம்பியுள்ளன.

வயல் நிலங்களுக்குள் கிட்டத்தட்ட 3 அடிக்கு மேல் மணல் மூடியிருப்பதாகவும் இதனால் விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும், மணலை அகற்றுவதற்கு பாரிய செலவு ஏற்படும் எனவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இந்தொ பகுதியில் உள்ள மணல் அகழ்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அல்லது விசேட கொடுப்பனவுகள் வழங்கியாவது குறித்த மணலை அகழ்ந்து அகற்ற வேண்டும். அதன் மூலமே மீளவும் இந்நிலத்தில் விவசாயம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். கமநல சேவைகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் இதற்கான உதவிகளை எமக்கு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் பற்றி திருகோணமலை மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் விஷ்ணுதாசனிடம் வினவியபோது –

"வயல் காணியில் இருந்து மண்ணை அகழ்வதற்கு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதியுடன் காணி உரிமையாளருக்கு அனுமதி வழங்கப்படும். அகழும் செலவை உரிய விவசாயிகள் மணலை விற்பனை செய்வதன் மூலம் ஈடு செய்து கொள்ள முடியும். தற்போது வீதிகள் சேதமடைந்திருப்பதால் சிறிது தாமதித்து அடுத்த போகத்திற்கு முன்னர் மணல் அகழும் நடவடிக்கையை இலகுவாக மேற்கொள்ள முடியும்" – எனத் தெரிவித்துள்ளார்

# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி வேறு பிரச்சினைகளைக் காட்டி இழுத்தடிப்பு

## மட்டு. மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி விசனம்

(வாலகிருஸ்ணா)



ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சினைகள் வருகின்றன. அப்பிரச்சினைகளை வைத்து எமது உறவுகளுக்கான நீதி கேட்கும் விடயம் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. எமது உறவுகளுக்கான தீர்வு வேண்டும். அது சர்வதேசத்தினூடாவே வேண்டும் என்பதைத் தான் நாங்கள் எங்கள் ஒவ்வொரு போராட்டம் ஊடாகவும், ஊடக சந்திப்புகள் ஊடாகவும் வெளிப்படுத்தி வருகின்றோம் என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று மட்டு. ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றினை மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கம் நடத்தியது. இதன்போது கருத்து தெரிவித்த அவர், மேலும் கூறியவை வருமாறு:-

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். ஆனால் நாங்கள் 17 வருடங்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டி சர்வதேசத்திடம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இதுவரைக்கும் எமக்கு நீதி மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது.

தற்பாதைய ஜனாதிபதியும், அரசாங்கமும் அனைவராலும் போற்றப்பட்டாலும் எமது பாதிக்கப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான ஒரு நீதிப் பொறிமுறையை உருவாக்குவதற்கு இயலாத அரசாங்கமாகவே இருக்கின்றது. இவர்களும் இனவாத்துடனேயே செயற்பட்டு வருகின்றனர்.

இந்த அரசும் கடந்த காலங்களில் எக்காரணத்திற்காகவும்நாங்கள்இலங்கை இராணுவத்தை விசாரணைக்குட்படுத்த மாட்டோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். இதன் காரணமாகவே நாங்கள் சர்வதேச நீதிப் பொறிமுறையை நாடி நிற்கின்றோம். நாங்கள் 2017 ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச நீதியை வேண்டி சர்வதேசத்திடம் சென்றும் எங்கள் குரல்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைய சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் கிழக்கில் அம்பாறையிலும், வடக்கில் வவுனியாவிலும் கவனவீர்ப்புப் பேரணிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

தற்போது செம்மணி போன்ற இடங்களில் எமது உறவுகள் புதைக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் அங்கு அமைக்கப்பட்ட தூபியும் இரண்டாவது தடவையாகவும் உடைக்கப்பட்டுள்ளது.

இந்த அராங்கம் பற்றி அனைவரும் புகழாரம் சொல்லும் நேரத்திலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான விசாரணைகளும், உயிர் ஆபத்துகளும் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. பல இடங்களில் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவற்றுக்கும் சரியான நீதி விசாரணை இல்லை.

தற்போது வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் இருக்கின்றன. தமது உறவுகளைத் தொலைத்து விட்டு அன்றாட உழைப்பின்றி நிர்க்கதியாக இருக்கின்ற குடும்பங்களும் உண்டு. இவர்கள் இருசாராரையும் ஒரே நிலையில் இந்த அரசு பார்க்கின்றது. அவ்வாறில்லாமல் இவர்களுக்கான ஒரு விசேட கரிசனை எடுக்க வேண்டும். அதே போன்று சர்வதேசத்தின் ஊடாக நாங்கள் இந்த விடயங்களை பல முறை தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

சர்வதேச நிபுணர் குழுவொன்றின் கண்காணிப்புடன் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான தீர்வு காணப்பட வேண்டும். அந்த எண்ணம் இல்லாத நிலையிலேயே இந்த அரசும் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சுனைகள் வருகின்றன. அப்பிரச்சினைகளை வைத்து எமது உறவுகளுக்கான நீதி கேட்கும் விடயம் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. எமது உறவுகளுக்கான தீர்வு வேண்டும். அது சர்வதேசத்தினூடாவே வேண்டும் என்பதைத் தான் நாங்கள் எங்கள் ஒவ்வொரு போராட்டம் ஊடாகவும், ஊடக சந்திப்புகள் ஊடாகவும் வெளிப்படுத்தி வருகின்றோம்.

ஆனால் இதில் எவருக்கும் கரிசனை இல்லை. சர்வதேசமும் இவர்களுக்குக் கால அவகாசத்தைக் கொடுக்கின்றது. இது வரை எமது தாய்மார் 350 பேருக்கு மேல் இறந்துள்ளார்கள். இப்படியே காலம் சென்றுகொண்டிருக்கின்றதே தவிர பொறுப்புக் கூறல், மீள்நிகழாமை என்ற விடயங்களை இந்த அரசாங்கம் மாத்திரம் அல்ல, எந்த அரசாங்கமும் இதுவரை எந்த இடத்திலும் வலியுறுத்துவதாக இல்லை.

இன்றைய மனித உரிமை தினத்திலாவது எங்களுடைய மனித உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

சர்வதேசத்திற்கும் இரக்கம் இல்லையா என்று தெரியவில்லை. சர்வதேச நாடுகள் எமது பிரச்சனைகளில் கரிசனை கொள்ள வேண்டும். அரசாங்கங்கள் மாறுகின்ற போது கால அவகாசங்கள் வழங்கப்படுகின்றமை எமக்கு மன வேதனையை அளிக்கின்றது. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நிலை அறியாமல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் மனஅழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு நோயாளிகளாக ஆகியுள்ளோம். இந்த மாதம் மட்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உறவுகளைத் தேடிய தாய்மார் 03 பேர் இறந்துள்ளார்கள். இவ்வாறு ஒவ்வொரு சாட்சியங்களாக அழிக்கப்படுகின்றன.

ஜனாதிபதி சிரித்து சிரித்தே காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றார். இதனால் எங்களுக்கு நடந்த வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இனஅழிப்பு என்ற விடயங்களுக்குப் பொறுப்புக் கூறல் இந்த அரைசாங்கத்திடமிருந்தும் வராது. ஏனெனில் இதனைச் செய்யச் சொன்னது சிங்கள அரசு, செய்தது சிங்கள இராணுவம். இராணுவத்தை விசாரிக்காமல் எவ்வாறு எங்கள் உறவுகளைக் கண்டுபிடிக்க முடியும்? எங்கள் உறவுகளின் தரவுகளை எங்களிடமிருந்து பெறுவதைத் தவிர அரசாங்கம் வேறு எதுவுமே செய்ததில்லை. சர்வதேசத்திற்கும் உலக நாடுகளுக்கும் ஒரு நாடகமாக இதனைக் காண்பிக்கின்றார்கள்.

இதனை பல தடவைகள் வலியுறுத்தியும் சர்வதேசம் பாராமுகமாக இருக்கின்றது. எமது உறவுகளுக்கு நடந்த விடயங்களை சர்வதேசம் பொறுப்புணர்வுடன் ஒரு குழுவை நியமித்து எங்களுக்கான சுயாதீன விசாரணையை மேற்கொள்ள முன்வர வேண்டும். குற்றவாளிகளிடமே சென்று நீதி கேட்க முடியாது. எமது உறவுகள் ஒப்படைக்கப்பட்டமைக்கு நாங்கள் கண்கண்ட சாட்சியமாக இருக்கின்றோம். இதனைக் கொண்டு உரிய நபர்களை விசாரித்தாலே பல உண்மைகள் வெளிவரும்.

ஒரு தீர்வில்லாத நீண்டகால போராட்டமாக வைத்திருக்கவே ஒவ்வொரு அரசாங்கமும் விரும்புகின்றது. எனவே இந்த அரசாங்கத்திற்கு ஒரு பாரிய அழுத்தத்தைச் சர்வதேச நாடுகள் கொடுக்க முன்வர வேண்டும்.

மொழி என்ற விடயம் மிகவும் முக்கியம். தற்போது ஏற்பட்ட அனர்தத்தின் போது சிங்கள மொழியில் 68 வகையான முன்னறிவித்தல்கள், தமிழ் மொழில் சுமார் 16 வகையான அறிவித்தல்களுமே கொடுக்கப்பட்டுள்ளன. சரியான முறையில் இரண்டு மொழிகளிலும் இந்த அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தால் தற்போது ஏற்பட்ட அனர்த்த இழப்புகளைக் குறைத்திருக்கலாம். இவ்வாறான மொழிப் பிரச்சினைகள் எமக்குப் பாரிய மன அழுத்தங்களைத் தந்துகொண்டிருக்கின்றன. - என்றார்.




# நேற்று சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் திருக்கோவிலில் கவனவீர்ப்புப் போராட்டம்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை யொட்டி அம்பாறை மாவட்ட வலிந்து காணமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில், தம்பிலுவில் பொதுச்சந்தை முன்பாக நேற்றுப் புதன் கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

கவனவீர்ப்பில் சங்கத்தின் உபதலைவி கி. கலைவாணி, செயலாளர் ரஞ்சனா தேவி, பொருளாளர் சுனித்திரா தேவி மற்றும் மனித உரிமை செயற்பாட்டா ளரும், அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஆலோசகருமான தா.பிர தீபன் உள்ளிட்டவர்களும் பல பொது மக்களும் கலந்து கொண்டனர்
















# டித்வா சேதங்கள் தொடர்பில் மதிப்பிட 6 மாதங்கள் தேவை

டிட்வா சூறாவளிக்கு பின்னரான சேதங்கள் தொடர்பில் முழுமையான மதிப்பீட்டை நிறைவு செய்வதற்கு சுமார் 6 மாதங்கள் தேவைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், உத்தேச மதிப்பீட்டு அறிக்கையை டிசம்பர் 15 ஆம் திகதிக்கு பின்னர் சமர்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் அமைக்கப்பட்ட REBUILDING SRI LANKA நிதியத்தின் ஊடாக இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத் தலைவர்கள், பொது மற்றும் தனியார்த்துறை பிரதிநிதிகளை கொண்ட முகாமைத்துவ குழு ஆகியவற்றிடம், தேவைகளை மதிப்பிடுதல், முன்னுரிமை திட்டங்களை வகுத்தல், வளங்களை ஒதுக்குதல் மற்றும் மீட்புக்கான நிதியை ஒதுக்குதல் ஆகிய பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், உள்நாடு மற்றும் சர்வதேச நாடுகள், அமைப்புகள், தனியார் நிறுவனங்களின் ஊடாக REBUILDING SRI LANKA நிதியத்திற்கு தொடர்ந்தும் நிதி ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆலையடிவேம்பு பிரதேச சபையில் வரவு - செலவுத் திட்டம் அங்கீகாரம்





**(வடிவேல் டினேஸ்)**

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு திட்டமானது நேற்றைய தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தவிசாளர் ஆரியதாச தர்மதாசவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் பின்னர் வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு இடம் பெற்றது. இதன் போது இலங்கை தமிழரசு கட்சியின் 07 உறுப்பினர்களும் 02 சுயேச்சை குழு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர். தேசிய மக்கள் சக்தியின் 07 உறுப்பினர்களும் வரவு – செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

இதன் போது 09 வாக்குகளால் வரவு செலவுத் திட்டமானது நிறைவேற்றப்பட்டது.

2026 ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு திட்டமானது ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி தொடர்பான பல அம்சங்களை உள்ளடக்கி இருப்பதாக ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் ஆர்.தர்மதாச தொரிவித்தார்.




# இராஜதுரைக்கு துறைநீலாவணையில் அஞ்சலி

மட்டக்களப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சொல்லின் செல்வர், கலாநிதி. செல்லையா இராஜதுரைக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் வைத்தியர் திருமதி.எஸ்.எஸ். மானதுங்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதலில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளரும் ஓய்வு நிலை அதிபருமான த.கணேசமூர்த்தி, இக்குழுவின் உப தலைவரும், ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தருமான க.அழகரெத்தினம், ஓய்வு பெற்ற வைத்தியசாலை உத்தியோகத்தர் க கோபாலன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வுநிலை அதிபருமான செல்லையா பேரின்பராசா, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.சரவணமுத்து, தாதிய உத்தியோகத்தர். பி.சுரேந்திரா, ஓய்வு பெற்ற வரி மதிப்பீட்டாளர் க.குணரெத்தினம், மருந்தாளர் அ.இளஞ்செழியன் ஆகியோர் அன்னாரின் பன்முகப்பட்ட சேமநலப் பணிகள் பற்றி உரையாற்றினர். கவிதாஞ்சலியும் இடம்பெற்றது. துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையை 1982 ஆம் ஆண்டு அவர் அமைத்துத் தந்தமையை அங்கு உரையாற்றிய யாவரும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்தமை குறிப்பிடத்தக்கது.










# டித்வா சூறாவளி காரணமாக மாசடைந்த கரையோரப் பகுதி

'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக, இலங்கையின் கரையோரப் பகுதியில் 143 கிலோ மீற்றர் தூரம் மாசடைந்துள்ளதாக கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், கற்பிட்டி மற்றும் கிழக்கு மாகாணக் கரையோரப் பகுதிகளே மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் நிலவிய கடும் மழையின் காரணமாக மண் சரிவுக்கு உள்ளான அனைத்துப் பகுதிகளிலிருந்தும், வீடுகளிலிருந்தான பொருள்களும், குப்பைகளும் ஆறுப் பள்ளத்தாக்குகள் ஊடாக இறுதியாக இலங்கைக் கடற் பகுதியையே வந்தடைந்துள்ளன.

இது தவிர, பருவப் பெயர்ச்சி மழை நிலைமை காரணமாக இந்தியக் கடல் பகுதியில் காணப்பட்ட குப்பைகளும் நாட்டின் கரையோரப் பகுதியை வந்தடைந்துள்ளமை கண்காணிப்பு ஒன்றின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்த கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காகக் கூலி அடிப்படையில் தொழிலாளர்களைப் பயன்படுத்தத் தயாராகி வருவதாகவும், இதற்குக் குறைந்தபட்சம் மூன்று வாரங்கள் எடுக்கும் என நம்புவதாகவும் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்களை சேகரித்ததன் பின்னர், அவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களின் உதவியைப் பெற எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நாடு முழுவதும் அமைந்துள்ள கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் 13 பிராந்திய அலுவலகங்களின் உதவிகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்த ஆண்டு 3 ஆம் தவணை முடிவில் மாணவர்களுக்கு மதிப்பெண் இல்லை



இந்த ஆண்டு 3 ஆம் தவணை முடிவில் பாடசாலை மாணவர்களுக்கு எந்த விதத்திலும் மதிப்பெண் வழங்கும் முறைமை இடம்பெறாது என கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் இருக்குமாயின் அது குறித்து பாடசாலையில் கலந்துரையாட முடியுமே தவிர, மாணவர்களுக்கு எந்த விதத்திலும் பரீட்சைகள் என அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே சில மாகாணப் பாடசாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும், அந்த வினாத்தாள்களைக் கலந்துரையாட முடியுமே தவிர, பரீட்சை நடத்த முடியாது எனவும் அமைச்சுச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மூன்றாம் தவணைக்குரிய தவணைப் பரீட்சை டிசம்பர் 08 ஆம் திகதி முதல் டிசம்பர் 19 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும், ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்த முறை பரீட்சைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பக்கச்சார்பாக வனத் திணைக்களம் செயற்படுவதாக வவுனியாவில் பொங்கி எழுந்தனர் தமிழ் எம்.பிக்கள்!

## ஒரு மாதம் கால அவகாசம் கேட்ட அபிவிருத்திக் குழு தலைவர்



(கி.வசந்தன்)

மக்களின் பூர்வீக குளங்களை விடுவிக்க முடியாது என கூறும் வனவளத் திணைக்களம், வவுனியா வடக்கு பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பெரும் காடுகளை அழிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது வன வளத் திணைக்களத்தால் எல்லைப்படுத்தப்பட்ட செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முசல்குத்தி, நீலியாமோட்டைக்குளம், வேப்பங்குளம் போன்றவற்றை விவசாயத் தேவை கருதி விடுவிக்குமாறு கடந்த கூட்டத்தில் கோரப்பட்ட நிலையில் அவை வன ஒதுக்கீட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் விடுவிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இற்கு எதிர்ப்பு வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், எந்தவித அனுமதியும் இல்லாமல் வவுனியா வடக்கில் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு ஒரு தரப்பால் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது, வனவளத் திணைக்களம் மகாவலி போன்றன அதற்கு அனுமதி வழங்கியுள்ளன அந்த மக்கள் தெரிவிக்கின்றனர் என்றார்.

அந்த பகுதியில் உருவாக்கப்படவுள்ள கிபிள் ஓயாத்திட்டம் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் இதுவரை கலந்துரையாடப்படவில்லை. அந்த திட்டத்தால் பாதிக்கப்படப் போவது அந்த பகுதியின் பூர்விக மக்கள். ஆனால் பயனடைபவர்கள் வேறு யாரோ. எனவே இனவாதத்தை நாங்கள் விரும்பவில்லை. அதற்கான சூழலை நீங்களே ஏற்படுத்துகின்றீர்கள் என்றும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்கு ஆதரவாக ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரவிகரன், றிசாட் பதியூதீன் ஆகியோரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டமையுடன், கருத்துக்களையும் முன்வைத்தனர்.

இது தொடர்பாக நீண்ட விவாதம் இடம்பெற்றதையடுத்து கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் உபாலி சமரசிங்க வவுனியா வடக்கில் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஒரு மாத கால அவகாசம் கோரியமையுடன், கிபுள் ஓயாத் திட்டம் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் தெளிவூட்டுவது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பார் எனவும் தெரிவித்திருந்தார்.



# தரம் 6 விண்ணப்பம் கோரும் கால எல்லை நீடிக்கப்பட்டது

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின்படி, தரம் 6 இற்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

06 ஆம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை, இணையவழி ஊடாக உள்ளீடு செய்வதற்கான கால எல்லையே நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் செயற்பாடு, கடந்த 05 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில், தற்போது டிசம்பர் 12 ஆம் திகதி வரை அதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட அதிதீவிர வானிலைக் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.



# 2026 தேர்தலில் 210 தொகுதிகளில் அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெறும்

## பொதுக்குழுக் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிற தேர்தலில் 210 தொகுதிகளில் வெற்றி அ.தி.மு.க.கூட்டணிவெற்றிபெறும்என்றும் அ.தி.மு.கவின் அழுத்தம் காரணமாகவே 1000 ரூபா மகளிர் உரிமை தொகையை வழங்குகின்றனர் எனவும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவிக்கையில்,

"தீய சக்தியான தி.மு.கவை தமிழகத்தில் இருந்து அடியோடு அகற்றவே எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவை தொடங்கினார். அமைதி, வளம், வளர்ச்சி என்ற ஜெயலலிதாவின் கொள்கையே அதிமுகவின் தாரக மந்திரம்.

நாட்டு மக்களைத்தான் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோர் தங்களது வாரிசாகப் பார்த்தனர். சட்டப் பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்கும் தருணத்தில் முதல்வர் நடந்துகொண்ட விதம் அனைவருக்கும் தெரியும்.

சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு நான் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் என்னுடைய மேஜை மீது திமுகவினர் ஏறி நடனமாடினார்கள். அமைச்சர்களின் மேசை மீதும் நடனம் ஆடினார்கள். இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்வுகளை எல்லாம் ஏற்படுத்தியவர் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின். அதையெல்லாம் நாம் கடந்து தான் வெற்றி பெற்றிருக்கிறோம்.

அதை எல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாமல் சட்டையை கிழித்துக் கொண்டு வீதியில் திரிந்தவர் தான் இன்றைய முதல்வர் ஸ்டாலின். அன்றைக்கு நீங்கள் சட்டையை கிழித்துக்கொண்டு தான் வெளியே சென்றீர்கள்.

ஆனால் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிற சட்டப்பேரவை தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். அப்போது என்ன ஆகப் போகிறீர்களோ? 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் அ.தி.மு.க. ஆட்சி அமையும். அ.தி.மு.க. ஆட்சி குறித்து தி.மு.கவால் விமர்சனம் செய்ய இயலவில்லை. எனது தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் ஏதாவது குறை இருந்ததா?

சூழ்ச்சியால்தான் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.1991 தேர்தலில் திமுக வெறும் 2 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. 2006 தேர்தலில் மைனாரிட்டி அரசை நடத்திக்கொண்டிருந்தது திமுக. 2014 மக்களவைத் தேர்தலில் திமுகவால் ஓரிடத்தில் கூட வெற்றி பெற இயலவில்லை.

முதல்வர் ஸ்டாலின் மின் கட்டணம், வீட்டு வரி, கடை வரி என அனைத்தையும் உயர்த்தியிருக்கிறார். வரி மேல் வரி போட்டு, மக்களை வாட்டி வதைக்கிறார். அ.தி.மு.க. பொற்கால ஆட்சியை கொடுத்தது. அதே ஆட்சி மீண்டும் தமிழகத்தில் வர நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

சக்கரம் சுற்றிக்கொண்டே இருக்கிறது. மேலே இருக்கிற சக்கரம் கீழே வரும். இது தெரியாமல் அ.தி.மு.க. குறித்து முதல்வர் விமர்சனம் செய்வது கேலி கூத்தானது. வெறும் 2 லட்ச வாக்குகளில் 43 சட்டப் பேரவைத் தொகுதிகளை இழந்திருக்கிறோம். அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிற தேர்தலில் 210 தொகுதிகளில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும்." என்று தெரிவித்துள்ளார்.

# முதல்வராகும் கனவெல்லாம் எப்போதும் எனக்கு இல்லை

## வைகோ தெரிவிப்பு




தமிழக முதல்வராகும் ஆசை, கனவெல்லாம் எப்போது எனக்கு கிடையாது எனம.தி.மு.க.பொதுச்செயலாளர்வைகோ தெரிவித்துள்ளார்.

மதுரை ஆரப்பாளையம் பகுதியில் ம.தி.மு.க. நிர்வாகி ஒருவரின் நகைக் கடை திறப்பு விழா நடந்தது. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பங்கேற்று புதிய கடையை திறந்து வைத்தார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கையில்,

"எதிர்கட்சிகளை நசுக்க பார்க்கிறது பா.ஜ.க. தமிழக ஆளுநராக இருக்க ஆர்.என்.ரவி தகுதியற்றவர். தி.மு.கவை உடைத்து துடைத்து எறிவோம் என மத்திய அமைச்சர் அமித் ஷா பேசுகிறார். அவரை விட 100 மடங்கு சக்தி கொண்டவர்களை திமுக எதிர்கொண்டுள்ளது. அமித் ஷா கட்சிகளை விமர்சனம் செய்யும்போது, கவனத்துடன் பேச வேண்டும்.

மத்திய அரசு திட்டங்களுக்கு சமஸ்கிருதத்தில் பெயர் வைத்து இந்தியாவை பா.ஜ.க. துண்டாட பார்க்கிறது. தி.மு.க. கூட்டணியில் சிறு சலசலப்பு கூட இல்லை. எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையை வைத்துக் கொண்டு தமிழகத்தில் 75 லட்சம் வாக்குகள் நீக்கப்படுகிறது. இதே எஸ்.ஐ.ஆர். மூலம் 65 லட்சம் வெளி மாநில புதிய வாக்காளர்களை தமிழகத்தில் சேர்க்க திட்டமிடுகின்றனர். இது மோசடி திட்டம்.

தமிழக முதல்வராகும் ஆசை, கனவெல்லாம் எனக்கு எப்போதும் கிடையாது. அதுபற்றி என்றுமே நான் பேசியது மில்லை. மத்தியில் இரு முறை கேபினட் அமைச்சர் வாய்ப்பை முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கொடுத்தும் ஏற்கவில்லை.

விஜய் சினிமாவில் எழுதி கொடுத்து வாசனங்களை பேசுவது போன்று பேசுகிறார். எம்.ஜி.ஆர். வளர்ந்தார் என்றால் தி.மு.கவின் கிளைக் கழகமாக அவர் செயல்பட்டார். அவர் அள்ளிக்கொடுக்கும் வள்ளலாக இருந்தார்.

சினிமாவில் நடிக்கும்போது, நெற்றியில் உதயசூரியனை வரைந்து இருப்பார். கட்சியில் அமைப்பாக இருந்து சிறு மனவேறுபாட்டில் வெளியேறி அ.தி.மு.கவை தொடங்கி வெற்றி பெற்றார். அவர் போன்று ஆயிரத்தில் ஒரு மடங்கு கூட விஜய் இல்லை.

த.வெ.க விஜய்யின் கனவு நினைவாகாது. காகித கப்பலில் அவர் கடலில் கடக்க முயல்கிறார். ஆகாய வெளியில் மணக்கோட்டையை கட்டுகிறார். அது வெறும் மண் கோட்டையாகவே போகும். பொது வாழ்வில் விஜய் நினைக்கும் இடத்திற்கு வரமுடியாது." என்று தெரிவித்துள்ளார்.



# மொரோக்கோவில் இரு கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 19 பேர் பலி!

மொரோக்கோவின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஃபெஸ் நகரின் அல்-முஸ்தக்பல் என்ற பகுதியில், நான்கு மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டடங்கள் திடீரென இடிந்து வீழ்ந்ததில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அரச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், இந்த சம்பவத்தில் 16 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் சிறுவர்களுக்கு அடங்குகின்றனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இடிந்து விழுந்த இந்த இரண்டு கட்டடங்களிலும் 8 குடும்பங்கள் வசித்து வந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்த பொலிஸாரும், சிவில் பாதுகாப்புப் பணியாளர்களும் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

காயமடைந்தவர்கள் ஃபெஸ் பல்கலைக்கழக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பெஸ் நகரம் பல நூறாண்டுகள் பழமையான கட்டடங்களைக் கொண்ட ஒரு பகுதியாகும்.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய நிலநடுக்கங்களால் பல கட்டடங்களின் அடித்தளங்கள் வலுவிழந்திருக்கலாம் என்று சில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தையடுத்து, மரகேஷ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 12,000 க்கும் மேற்பட்ட கட்டடங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளன என அரசாங்கம் அடையாளம் கண்டிருந்தது.


இதேவேளை, ஃபெஸ் பழைய நகரப் பகுதியில் கடந்த ஆண்டு பெப்ரவரியில் வீடொன்று இடிந்ததில் 5 பேர் உயிரிழந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புளோரிடாவில் தரையிறங்கிய விமானம் வான் மீது மோதி விபத்துக்குள்ளானது

அமெரிக்காவின் புளோரிடா மாநிலம், பிரெவார்ட் (Brevard) பகுதியில் ஐ-95 நெடுஞ்சாலையில் பயணித்துக்கொண்டிருந்த டொயோட்டா கெம்ரி ரக வான் மீது சிறிய ரக விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தைத் துல்லியமாகப் பதிவு செய்த காணொலி ஒன்று வெளியாகியுள்ள நிலையில், விமானத்தின் 27 வயதுடைய விமானியும், அவரோடு பயணித்த மற்றொரு நபரும் எவ்வித காயங்களுமின்றி விபத்திலிருந்து தப்பியுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கெம்ரி வானின் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்தாலும், இச்சம்பவத்தில் எவ்வித உயிரிழப்புகளும் பதிவாகவில்லை என புளோரிடா நெடுஞ்சாலை போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இந்த விமானம் மிகவும் பரபரப்பான நெடுஞ்சாலையில் பலவந்தமாகத் தரையிறங்க முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பிரெவார்ட் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

விபத்துக்கு வழிவகுத்த இந்த அவசரத் தரையிறக்கத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 11.12.2025




இன்று திருட்டு ஏற்பட வாய்ப்புள்ள தால் கடினமான சூழ்நிலை காணப்படும். இழப்பு ஏற்படாமல் இருக்க உங்கள மதிப்பு மிக்க பொருட்களை பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் பணிகளை கவனமுடன் ஆற்ற வேண்டும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

கோவிலுக்கு செல்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்குவீர்கள். இதனால் கடவுளின் அருளும் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பும் ஏற்படும்.

பண வரவு மகிழ்சிகரமாக இருக்காது. நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். நிதி விஷயத்தில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகள் காணப்படும். என்றாலும் அர்ப் பணிப்பு மற்றும் பொறுப்பான அணுகுமுறை மூலம் சவால்களை எதிர் கொண்டு வெற்றி பெறலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப் படுகின்றது. விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்படும் என்ப தால் பயணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும்.

அமைதியாகவும் சுமூகமாகவும் இருப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும். உங்கள் மன நிலையில் மாற்றம் வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நீங்கள் உங்கள் சம்பாத்தியத்தை அனுபவிக் கும் நிலையில் இருக்க மாட்டீர்கள்.

உங்கள் கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் முயற்சியில் எளிதாக வெற்றி காணும் நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இன்று எடுக்கும் முக் கிய முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் சிறப்பான வாய்ப்புகள் காணப்படு கின்றன. மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்கள் திறமை மிகவும் பாராட்டப்படும். உங்கள் செயல் திறனில் உங்கள் தனித்தன்மை வெளிப்படும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் சேமிப்பும் கணிசமாக உயரும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகளை சமாளிக்க நேர லாம். நீங்கள் இந்தச் சவால்களை உறுதி யுடனும் திடமான மனநிலையுடனும் சமாளிக்க வேண்டும். அறிவார்ந்த முறை யில் சிந்தித்து செயல்பட வேண்டும்.

பணியின் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அதிக பணிகள் காரணமாக தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியை கடைபிடிக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பரா மரிக்க வலுவான பிணைப்பை உருவாக்க அனுசரித் தும் உறவிற்கான மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.




இன்று உங்கள் செயல்களை மேற் கொள்வதில் தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை. திறம்பட திட்டமிட வேண்டும். இறைவழிபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணிகள் கடினமாக காணப்படும். சக பணியாளர் களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் பாராட்டும் பெற நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உறவை பாதிக்கும் என்பதால் உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இன்று நீங்கள் கூடுதல் செலவுகள் செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

தோல் ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக் கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று உங்களுக்கு செழிப்பான நாள். நீங்கள் கடினமான பணிக ளைக் கூட எளிதாக மேற்கொள்வீர்கள். அனுசரனையான அணுகுமுறை மூலம் நன்மை பெறலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன் கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் செயல்திறனில் உங்கள் படைப் பாற்றல் வெளிப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை அதிர்ஷ்டகரமாக இருக்கும். பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் நீங்கள் லாபம் காணலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும். நீங்கள் உங்கள் இலக்குகளை அடைய நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் தன்னம் பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு ஊக்கத் தொகை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்த அன்பான உணர் வின் மூலமாக இருவரிடையே உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்களுக்கு கணிசமான தொகை கிடைக்கும். அதனை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்து வீர்கள்.




உணர்ச்சி வசப்பட்டு சமநிலை இழப் பீர்கள். திரைப்படம் பார்த்தல் அல்லது இசை கேட்டல் போன்ற நிகழ்சிகளின் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான நிலை காணப்படாது. அதிக வேலைகள் உங்களுக்கு வருத்தம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது நல்ல புரிந்துணர்விற்கு தடையாக இருக்கும். உங்கள் துணையுடன் நல்லிணக்கம் பரா மரிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இருக்கும் பணத்தை விவேகமான முறையில் செலவழிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்ள் - 11.12.2025




இன்று நீங்கள் நம்பிக்கை இழக்கும் சூழல் உருவாகும். தடைகளை சமாளித்து நன்மை காண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்வீர்கள். அமைதியைப் பராமரிக்க இத்தகைய நடவடிக்கையை தவிர்க்க வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஒவ்வாமை காரணமாக இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சியும் சந்தோஷமும் கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். அதிர்ஷ்டம் மூலம் முன்னேற்றம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வீட்டில் நடைபெறவிருக்கும் ஒரு விழா பற்றி உங்கள் துணையுடன் திட்டமிட்டு ஆலோசிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பங்கு வர்த்தகங்களில் பங்கு பெறுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணலாம்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று உங்களிடம் அதிர்ஷ்டம் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை உங்களை நன்றாக புரிந்து கொள்வார்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய பலன்கள் திருப்தி அளிக்காது. இன்று ஆன்மீக காரியங்களில் ஈடுபடுங்கள். பக்திப் பாடல்கள் மற்றும் சொற்பொழிவுகள் கேட்பதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும். இதனால் அமைதி கிடைக்கும்.

இன்று பணியிடச் சூழல் சுமூகமாக காணப்படாது. உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் பிரச்சினை காணப்படும். இது இருவருக்கும் இடையேயான உறவை பாதிக்கும் என்பதால் இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். அதை உங்களால் நிர்வகிக்க இயலாது.

# புத்தளத்தில் சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட பீடி இலைகளுடன் 2 இளைஞர்கள் கடற்படையினரால் கைது





**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புத்தளம், விஜயகடுபொத, 61 ஆம் கட்டையின் வீதித் தடுப்பில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, மேற்கொண்டு எடுத்துச் செல்ல முயன்ற சுமார் ஐந்நூற்று நாற்பத்தி இரண்டு கிலோகிராம் பீடி இலைகளைக் கப் வாகனத்துடன் கடற்படையினர் கைப்பற்றினர். அவற்றை ஏற்றி வந்த இரண்டு சந்தேக நபர்களையும் அவர்கள் கைது செய்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் தம்பபன்னிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான வகையில் வீதியில் பயணித்த கெப் (01) சோதனையிடப்பட்டது.ர

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 22 மற்றும் 24 வயதுடைய புத்தளம், எத்தாளை மற்றும் பாலாவி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். சந்தேகநபர்கள், கப் மற்றும் பீடி இலைகளின் தொகுதிகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் திணைக்கள விசேட பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.